மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக திருமணம் செய்கின்ற அந்த இனிய நாளை அழைப்பிதழ் தந்து, அத்திருமணத்தில் கலந்து கொள்ள வேண்டுமென்று அழைப்பார்கள். அது மரபு. அதுதான் எங்களைப் போன்றவர்களுக்கெல்லாம் தெரிகிறது. ஆனால் யாருக்கு என்று தேனிலவு என்பதையெல்லாம் அலசி ஆராய்ந்து பார்க்கக்கூடிய பொறுப்பு எங்களிடத்திலே இல்லை; எங்களுக்கு அது வேலையும் அல்ல. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 413, டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

413—

பால் குளிரூட்டும் நிலையம் அமைத்தல்.

***37935**—*டாக்டர் எஸ். சுந்தரராஜ்:*

மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா-

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் மேலும் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடவடிக்கை எடுக்கப்படும்?

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன், பால்வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாயல்குடி முதல் ஆர்.எஸ். மங்கலம் வரை கிட்டத்தட்ட 160 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. அதோ போல் பரமக்குடியிலிருந்து இராமேஸ்வரத்திற்குக் கிட்டத்தட்ட 150 கிலோமீட்டருக்கு மேற்பட்ட தொலைவிலிருந்து பால் வரவேண்டியிருக்கிறது. இராமேஸ்வரம் போன்ற பகுதிகளுக்குச் சுற்றுலாப் பயணிகள் வருவதால், அங்கே பால் தட்டுப்பாடு அதிகமாக இருக்கிறது. இதையெல்லாம் கருத்தில் கொண்டு, இருக்கின்ற பாலைக் குளிரூட்டி, பாதுகாப்பாக வைத்து, மக்களுக்கு வினியோகம் செய்வதற்காக, இராமநாதபுரம்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1995 ஏப்ரல் 24]

மாவட்டத்தில் முதுகுளத்தூரிலும் மேலும் பால் குளிரூட்டும் நிலையங்களை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அந்தப் பிற்பட்ட மாவட்டத்திற்கு முன்னுரிமை கொடுத்து—அங்கே கால்நடைகள் அதிகமாக வளர்க்கப்பட்டு, கால்நடைச் செல்வங்கள் மூலம் பல்வேறு குடும்பங்கள் வாழ வழிவகை இருப்பதால், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி அவர்கள் ஆட்சியில்—அந்த மாவட்டத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, அவற்றை ஏற்படுத்தித் தருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் பரமக்குடியிலும் கமுதியிலும் ஏற்கெனவே இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்கள் இருக்கின்றன. அங்கே பால் உற்பத்தியைப் பெருக்குவதற்கான அத்தனை நடவடிக்கைகளையும் அரசு எடுத்து வருகிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையில் புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கமுதி, மாவட்டத்தின் ஒரு கோடியில் இருக்கிறது. இங்கே இரண்டு இடங்களிலும் பால் குளிரூட்டும் நிலையங்கள் இருந்தாலும், மாவட்டத்தில் ஆர்.எஸ்.மங்கலம் முதல் சாயல்குடி வரை பொதுவான ஒரு இடமாக இருக்கின்ற இராமநாதபுரத்திலே அந்தப் பால் குளிரூட்டும் நிலையம் இருக்குமானால் காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் தினமும் பால் வழி தடங்கள் மூலமாக சேகரிக்கப்பட்ட பால் நல்லமுறையில் குளிரூட்டப்பட்டு அங்கே மக்களுக்கு வினியோகம் செய்ய முடியும். ஆகவே, இப்போது இருக்கின்ற பால் வழி தடங்களில், இருக்கின்ற பேருந்துகள்கூட போய் பாலை குறிப்பிட்ட நேரத்தில் எடுத்துவர முடியாத சூழ்நிலை இருக்கின்றது. ஆகவே, இதை எல்லாம் கருத்தில் கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூடுதலாக அந்தப் பால் வழி தடங்களில் பேருந்துகள் விடுவதற்கும், மாவட்டத்தில், இராமநாதபுரத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைப்பதற்கும் முன்னுரிமை கொடுத்து, வருகின்ற நிதியாண்டிலாவது அமைத்துத் தருவார்களா? இதனுடைய முக்கியத்துவம் கருதி இம் மாவட்டத்திற்கு செய்து தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் வினியோகத்தில் இருக்கின்ற குறைபாடுகள் விரைவாக நிவர்த்தி செய்யப்படும். இருந்தாலும் இப்பொழுது அங்கே இருக்கின்ற இரண்டு பால் குளிரூட்டும் நிலையங்களில் கிட்டத்தட்ட 20 ஆயிரம் லிட்டர்

பால் பதப்படுத்தப்படுத்தக்கூடிய திறன் உள்ளது. ஆனால், அங்கே உற்பத்தி 10 ஆயிரம் லிட்டராக தான் இருக்கிறது. அதனால், புதிதாக பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க முடியாது. ஆனால், அங்கு வினியோகம் செய்வதிலே இருக்கின்ற பிரச்சினைகளை தீர்வுக் கண்டு நல்லமுறையில் வினியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 414, செல்வி கோ. மல்லிகா, மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

414—

புவனகிரியில் பின்னி பிராசசிங் பிரிவு கட்டுதல்.

***33528**—செல்வி கோ. மல்லிகா:

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா-

(அ) தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரி பின்னி நிறுவனத்தின் பிராசசிங் மற்றும் டிசைனிங் பிரிவு விரைவில் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : தென்னாற்காடு-வள்ளலார் மாவட்டம், புவனகிரியில் பிராசசிங் பிரிவு அமைக்க பின்னி நிறுவனம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

செல்வி கோ. மல்லிகா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவியின் சீரிய முயற்சியின் காரணமாக தான் பின்தங்கியப் பகுதியான புவனகிரி தொகுதியில் இந்த பின்னி நிறுவனத்தை அமைப்பதற்கான முறையில் ஆணையிட்டார்கள். ஆயினும் அந்த இடத்தில் எந்தவித பணியும் நடைபெறவில்லை. அந்த இடத்தில், இந்த இடம் பின்னி நிறுவனத்திற்குச் சொந்தமானது என்று ஒரு போர்ட் தான் உள்ளது. அந்த நிறுவனம் எந்தவித முயற்சியும் மேற்கொண்டு எடுக்கவில்லை. ஓடாத மில்கள், இயங்காத ஆலைகள், மூடிக்கிடக்கின்ற தொழிற்சாலைகள்